# நிதித்துறை

## மானியக் கோரிக்கை எண். 50

# ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2024 - 2025

# தங்கம் தென்னரசு

நிதி மற்றும் மனிதவள
மேலாண்மைத்துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2024

# மானியக் கோரிக்கை எண்.50

# ஓய்வூதியங்களும்

# ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்

# கொள்கை விளக்கக் குறிப்பு 2024-2025

மாநிலத்தில் பணிபுரியும் பணியாளர்கள் வரையறுக்கப்பட்ட பயன்தரும் ஓய்வூதியத் திட்டம் (பழைய ஓய்வூதியத் திட்டம்) மற்றும் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் என இரு வகையான திட்டங்களின் கீழ் பயன்பெற்று வருகிறார்கள். 01-04-2003-ஆம் நாளுக்கு முன்னர் பணியில் சேர்ந்துள்ள பணியாளர்கள் வரையறுக்கப்பட்ட பயன்தரும் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் பயன் பெறுகிறார்கள். 01-04-2003-ஆம் நாள் அன்றோ அல்லது அதற்கு பின்னரோ பணியில் சேர்ந்தவர்கள் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் பயன்பெறுகிறார்கள். வரையறுக்கப்பட்ட பயன்தரும் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் 6,97,236 ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் முறையே, ஓய்வூதியம்

மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெற்று வருகின்றனர். 31-05-2024 அன்றுள்ளவாறு 6,14,175 பணியாளர்கள் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் பணிபுரிகிறார்கள்.

## I. பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம்

### 1. முன்னுரை

(i) ஐந்தாவது தமிழ்நாடு ஊதியக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், 01-06-1988 முதல் ஒன்றிய அரசின் ஊதிய விகிதங்கள் மாநில அரசு பணியாளர்களுக்கு நீட்டிக்கப்பட்டது. இதன் விளைவாக, ஓய்வுபெற்ற பணியாளர்களின் ஓய்வூதியமானது, அப்பணியாளர்கள் வகிக்கும் பதவிக்கான திருத்தப்பட்ட ஊதிய விகிதத்தின் அடிப்படையில் திருத்தியமைக்கப்பட்டது. அதிகரித்து வந்த சம்பளம் மற்றும் ஓய்வூதிய செலவினங்கள் அரசின் நிதி ஆதாரங்களால் ஈடுகட்ட முடியாத அளவிற்கு அதிகரித்து வந்தன. இதனால், கட்டமைப்பு மேம்பாடு மற்றும் நலத்

திட்டங்களை நிறைவேற்ற போதிய நிதியில்லா நிலை ஏற்பட்டது.

(ii) ஓய்வூதியத் திட்டத்தினை மறுசீரமைப்பதற்கான பரிந்துரைகளை அளிக்கும் பொருட்டு கர்நாடக அரசின் ஓய்வுபெற்ற தலைமைச் செயலாளர் திரு.பி.கே.பட்டாச்சார்யா, அவர்களின் தலைமையில் ஒன்றிய அரசு 26-06-2001 அன்று உயர்மட்ட வல்லுநர் குழுவினை அமைத்தது. இந்த உயர்மட்ட வல்லுநர் குழுவானது தனது பரிந்துரையில், பணியாளர்கள் மற்றும் ஒன்றிய அரசிடமிருந்து சமமான பங்களிப்புடன், பணியாளர்கள், வரையறுக்கப்பட்ட பயன்தரும் ஓய்வூதியம் பெறக்கூடிய வகையிலான புதிய திட்டத்தை பிப்ரவரி 2002-இல் பரிந்துரைத்தது. புதிதாக அரசுப் பணியில் சேரும் பணியாளர்களுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பங்களிப்புடன் கூடிய திட்டத்தை வடிவமைப்பதில் ஒன்றிய அரசின் நோக்கமானது, மாநில அரசுப் பணியாளர்கள், நடுத்தரவர்க்கத்தினை சார்ந்த சுயதொழில் புரிபவர்கள்

மற்றும் அமைப்பு சாராத் துறைகளில் குறைந்த வருமானம் உள்ளவர்கள் போன்ற பிற குழுக்களுக்கும் காலப்போக்கில் சேவை செய்யும் நோக்கத்தில் கட்டமைப்பை உருவாக்குவதாகும்.

(iii) ஓய்வூதிய சீர்திருத்தம் தொடர்பான ஒன்றிய அரசின் முன்முயற்சியைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசின் 2002-2003-ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் பின்வரும் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

*"நாட்டின் பிற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில், தமிழ்நாடு அரசு தான் மிக அதிக அளவிலான ஓய்வூதிய செலவுப் பொறுப்புகளை ஏற்றுள்ளது. மொத்த வருவாயினச் செலவினங்களில் மிகவும் வேகமாக வளர்ந்து வரும் செலவினங்களில் இதுவும் ஒன்றாகும். 2001-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் முதல் தேதியிலிருந்து பணியில் நியமிக்கப்படும் அனைத்துப் பணியாளர்களும், மத்திய அரசினால் அமைக்கப்பட்டு வரும் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தைப் (Contributory Pension Scheme)*

*போன்றதொரு புதிய திட்டத்தின் கீழ் கொண்டு வரப்படுவர் என்று ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ளது."*

(iv) வரவு-செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டதன் தொடர் நடவடிக்கையாக, 01-04-2003-ஆம் நாள் அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ மாநில அரசுப் பணியில் சேர்ந்த பணியாளர்களுக்குப் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட பணியாளர்களுக்கு தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978 பொருந்தாது என்று உரிய திருத்தங்கள் வெளியிடப்பட்டன.

**2. பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்திற்கான வழிமுறைகள்**

(i) பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் பணிபுரியும் பணியாளர்களுக்கு அவர்களின் அடிப்படை ஊதியம் மற்றும் அகவிலைப்படியில் 10 சதவீதம் பிடித்தம் செய்யப்படுகிறது. அரசு அதற்கு சமமான அளவு பங்குத் தொகையினைச் செலுத்துகிறது.

(ii) 31-05-2024 அன்றுள்ளவாறு இத்திட்டத்தின் கீழ், உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்கள் உட்பட 6,14,175 பணியாளர்கள் உள்ளனர். மேலும் 30-04-2024 வரை, பணியாளர்களின் பங்களிப்பு, அரசு பங்களிப்புத் தொகை மற்றும் வட்டி சேர்த்து மொத்தம் 73,974.64 கோடி ரூபாய் இந்திய ஆயுள் காப்பீட்டு நிறுவனத்தில் (LIC) முதலீடு செய்யப்பட்டுள்ளது.

3. வட்டி

தற்போது பொது வருங்கால வைப்புநிதி கணக்குகளுக்குப் பொருந்தும் காலாண்டுக்கான வட்டி விகிதத்திலேயே பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தில் சேர்ந்த தொகைக்கான வட்டி அனுமதிக்கப்படுகிறது. பொது வருங்கால வைப்பு நிதிக்கு 01-04-2024 முதல் 30-06-2024 வரையுள்ள கால அளவிற்கு 7.1 சதவீதம் வட்டி அனுமதிக்கப்படுகிறது.

## 4. பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் சேர்ந்த தொகையிலிருந்து செய்யப்பட்ட முதலீடுகள்

பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் சேர்ந்த மொத்த தொகையும், ஆயுள் காப்பீட்டு நிறுவன ஓய்வூதிய நிதியில் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

## 5. ஓய்வு பெற்றவர்களுக்கு இதுவரை வழங்கப்பட்ட இறுதித்தீர்வு

பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்திற்கென விதிகள் உருவாக்கப்படாத நிலையில், பணியாளர் மற்றும் அரசு பங்களிப்பு உள்ளிட்ட திரட்டப்பட்ட தொகையை வட்டியுடன் சேர்த்து ஒட்டுமொத்த தொகையாக வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. 31-05-2024 வரை பணியிலிருந்து ஓய்வுப்பெற்ற / பணிதுறப்பு செய்த / இறந்த / பணிநீக்கம் செய்யப்பட்ட பங்களிப்பு ஓய்வூதியத் திட்ட சந்தாதாரர்களிடமிருந்து பங்களிப்பு ஓய்வூதியத்திட்ட இறுதி தொகை கோரி 38,129 விண்ணப்பங்கள் கருவூலக் கணக்கு ஆணையரகத்தால் பெறப்பட்டுள்ளன. அதில், 37,095 பணியாளர்களுக்கு இறுதி தீர்வு தொகையாக

3,143.61 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. 2023-2024-ஆம் ஆண்டில் ஓய்வுபெற்ற 7,738 பணியாளர்களுக்கு இறுதித்தீர்வுத் தொகையாக 1,158.28 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

## 6. உள்ளாட்சி அமைப்புகளுக்கான பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம்

மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்களுக்குப் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தினை செயல்படுத்துவதற்கான மாநில ஒருங்கிணைப்பு அதிகாரியாக (State Nodal Officer) கருவூலக் கணக்குத்துறை ஆணையர் நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கென மென்பொருள் ஒன்று உருவாக்கப்பட்டு, இது தொடர்பான புள்ளிவிவரங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

## 7. தமிழ்நாட்டில் உள்ள அகில இந்தியப்பணி (AIS) அலுவலர்களுக்கான தேசிய ஓய்வூதிய திட்டம் (NPS)

தமிழ்நாடு பிரிவைச் சார்ந்த அகில இந்தியப்பணி (AIS) அலுவலர்களுக்கு பங்களிப்பு ஓய்வூதியத் திட்டமான தேசிய ஓய்வூதிய திட்டத்திற்கு தேசிய பத்திரங்கள் வைப்பு நிறுவனம் (National Securities Depository Limited) ஆவண வைப்பு நிறுவனமாக நியமனம் செய்யப்பட்டதுடன், ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் (PFRDA) அறக்கட்டளை வங்கியாகவும், ஓய்வூதிய நிதிமேலாளர் மற்றும் வருடாந்திர சேவை வழங்குவோராகவும் நடைமுறைப்படுத்த தமிழ்நாடு அரசால் 28-06-2017 அன்று ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. 31-05-2024 வரை அகில இந்தியப் பணி அலுவலர்களுக்கான சந்தா மற்றும் அரசின் பங்களிப்புத் தொகையாக 59.26 கோடி ரூபாய் தேசிய பத்திரங்கள் வைப்பு நிறுவனத்திற்கு (NSDL) மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

## 8. வல்லுநர் குழு அமைத்தல்

வரையறுக்கப்பட்ட பயன்தரும் ஓய்வூதியத் திட்டத்தை தொடர பல்வேறு அரசுபணியாளர்கள்/ சங்கங்களின் கோரிக்கையை செயல்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து, பொருத்தமான முடிவினை மேற்கொள்ள அரசிற்கு பரிந்துரைக்க ஏதுவாக 2016-ஆம் ஆண்டில் ஒரு வல்லுநர்குழு அமைக்கப்பட்டது. இக்குழுவின் அறிக்கையானது அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டு பரிசீலனையில் உள்ளது.

## II. அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம்

வரவு செலவுத் திட்ட விவரங்கள் தொகுப்பு மையம் ஒன்றை அரசு 1971-ஆம் ஆண்டு தோற்றுவித்தது. அரசு துறைகளின் பலதரப்பட்ட செயல்பாடுகளுக்குத் தேவையான வகையில் அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம் 1972-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. நிர்வாக வசதிகளுக்காக 1975-ஆம் ஆண்டு மேற்கண்ட இரண்டு

மையங்களும் ஒருங்கிணைக்கப்பட்டு அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம் (GDC) ஏற்படுத்தப்பட்டது.

அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம் கீழ்க்காணும் திட்டப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

1) அரசுப் பணியாளர்களுக்கான பங்களிப்புடன் கூடிய ஓய்வூதியத் திட்டம்.

2) உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்களின் பங்களிப்புடன் கூடிய ஓய்வூதியத் திட்டம்.

3) புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் (NMP) மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் (ICDS) பணியாளர்களுக்கான பொது வருங்கால வைப்பு நிதி திட்டம் (GPF).

4) சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு அளிக்கும் விவசாயிகளின் வங்கி கணக்கில் நேரடியாக ஊக்க தொகை செலுத்துதல் (Direct Benefit Transfer).


1) அரசாணை (நிலை) எண் 201, நிதித் (ஓய்வூதியம்) துறை, நாள்.21-05-2009-இன் படி, ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், நிதியுதவி பெறும் கல்வி நிறுவனங்கள், நகராட்சிப் பள்ளிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்களின் பங்களிப்புடன் கூடிய ஓய்வூதியத் திட்டத்தின் கணக்குகள் அரசுத் தகவல் தொகுப்பு விவர மையத்தால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

அரசாணை (நிலை) எண்.463, நிதித் (ஓய்வூதியர் குறை தீர்வு) துறை, நாள் 27-12-2013-இன் படி அரசு பணியாளர்களுக்கு புதிய பங்களிப்புடன் கூடிய ஓய்வூதியத் திட்ட கணக்கு எண் ஒதுக்கீடு செய்தல் மற்றும் பராமரிக்கும் பணிகள் அனைத்தும் மாநில கணக்காயர் அலுவலகத்திலிருந்து அரசுத் தகவல் தொகுப்பு விவர மையத்திற்கு மாற்றம் செய்யப்பட்டது. இவ்வலுவலகத்திற்கு மாற்றம் செய்த பின்னர் காலமுறை ஊதியம் பெறும் அனைத்து அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள், உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும்

நிலையாக்கப்படாத பணியாளர்கள் ஆகியோருக்கு குறியீட்டு எண் ஒதுக்குதல் மற்றும் கணக்குகளைப் பராமரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

31-05-2024 அன்று பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் வரும் பணியாளர்களின் எண்ணிக்கை பின்வருமாறு:

| வ.எண் | வகை | 31-05-2024 அன்று பணியில் உள்ளோர் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | அரசுப் பணியாளர்கள் | 4,97,904 |
| 2 | நிதி உதவி பெறும் பள்ளிகள் / கல்லூரிகள் | 46,059 |
| 3 | ஊராட்சி ஒன்றிய பள்ளிகள் | 38,822 |
| 4 | நகராட்சி பள்ளிகள் | 1,803 |
| 5 | உள்ளாட்சி அமைப்பு பணியாளர்கள் | 29,587 |
| | மொத்தம் | 6,14,175 |




**இறுதி கணக்குத்தாள் வழங்குதல்**

37,140 ஓய்வுபெற்ற / பணிதுறப்பு செய்த / இறந்த பணியாளர்களின் இறுதி கணக்குத்தாள்கள் அரசு தகவல் தொகுப்பு விவர மையத்தால் வழங்கப்பட்டுள்ளது.


**2) உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்களின் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம்**

உள்ளாட்சி அமைப்புகளில் சுமார் 29,587 நிலையாக்கப்படாத பணியாளர்கள் பங்களிப்பு ஓய்வூதியத்

திட்டத்தின் கீழ் பணிபுரிந்து வருகிறார்கள். இணையதளம் வழியாக, சந்தாபிடித்தம் மற்றும் அதற்கீடான உள்ளாட்சி அமைப்புகளின் பங்களிப்பு ஆகியவை உள்ளீடு செய்யப்பட்டு, உள்ளாட்சி நிதி தணிக்கை துறையினரால் தணிக்கை செய்யப்பட்டு இறுதிதீர்வு வழங்கப்படுகிறது.

**3) புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் (NMP) மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் (ICDS) திட்டப் பணியாளர்களுக்கான பொது வருங்கால வைப்பு நிதி திட்டம் (GPF)**

அரசாணை (நிலை) எண் 108, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 19-04-2010ல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் (NMP) மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகளின் (ICDS) திட்டப் பணியாளர்களுக்கான பொது வருங்கால வைப்பு நிதி குறித்தப் பணிகள் அரசு தகவல் தொகுப்பு விவர மையத்திற்கு ஒப்படைக்கப்பட்டன. மேற்கண்ட திட்டத்தில் 31-05-2024 அன்றுள்ளவாறு 2,12,773 சந்தாதாரர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.




அரசாணை (நிலை) எண். 53, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 20-07-2015-இல் இத்திட்டத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளது. இதனடிப்படையில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டப் பணியாளர்களிடம் இருந்து ஆகஸ்ட் 2015 முதல் வருங்கால வைப்பு நிதி பிடித்தம் செய்யப்படுகிறது.

இப்பணியாளர்களின் கணக்கு தாள்கள் விவரம் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படுகிறது.

**சத்துணவுத் திட்டம் (NMP) மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டப் (ICDS) பணியாளர்களுக்கு தற்காலிக முன்பணம் / 90% பகுதி இறுதித் தொகை வழங்குதல்**


அரசு கடித எண்.9831/ சமூக நலத்துறை/4-2/2020-3, நாள் 18-06-2021-இல் சத்துணவுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட பணியாளர்களுக்கான தற்காலிக முன்பணம் பெற்றிட உரிய ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது. சந்தாதாரர்கள் முதன் முறையாக தற்காலிக முன்பணம் பெறுவதற்கு 5 ஆண்டுகள் சந்தாதொகை செலுத்தியிருக்க வேண்டும். சந்தாதாரர் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெறும் நாளுக்கு ஓராண்டு இருக்கும் பொழுது 90% பகுதி இறுதித் தொகையினைப் பெறுவதற்கு விண்ணப்பிக்கலாம். மீதமுள்ள 10% தொகை அரசு தகவல் தொகுப்பு விவர மையத்தால் ஒப்பளிப்பு ஆணை

வழங்கப்பட்ட பிறகே சம்பளம் பெற்று வழங்கும் அலுவலரால் வழங்கப்படும்.

## இறுதி தொகை வழங்கும் பணிகள்

31-05-2024 வரை இத்திட்டத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற 28,461 பணியாளர்களுக்கு பொது வருங்கால வைப்புநிதி இறுதித்தொகை 138.61 கோடி ரூபாய் அரசு தகவல் தொகுப்பு விவர மையத்தால் வழங்கப்பட்டுள்ளன.

**சத்துணவுத் திட்டம் / ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டப்பணியாளர்களுக்கு இறுதி தொகை வழங்கப்பட்ட விவரம்**





| | 2019-2020 1 | 2020-2021 2 | 2021-2022 3 | 2022-2023 4 | 2023-2024 5 |
|---|---|---|---|---|---|
| சத்துணவுத் திட்டப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட இறுதி ஒப்பளிப்பு | 2877 | 2438 | 2135 | 5481 | 5313 |
| ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட இறுதி ஒப்பளிப்பு | 213 | 642 | 1384 | 3014 | 4964 |

**4) சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு அளிக்கும் விவசாயிகளின் வங்கி கணக்கில் நேரடியாக ஊக்க தொகை வழங்குதல் (Direct Benefit Transfer)**


கரும்பு உற்பத்தியாளர்களுக்கு ஊக்கத் தொகை 2017-2018 ஆம் ஆண்டு கரும்பு அரவை பருவம் முதல் வழங்கும் பொருட்டு, நேரடி பயனாளி திட்டத்தினை (Direct Benefit Transfer Scheme]) அரசு அமல்படுத்தியுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் சம்பந்தப்பட்ட பயனாளியின் வங்கி கணக்கிற்கு நேரடியாக மின்னணு பரிவர்த்தனை திட்டம் வாயிலாக ஊக்கத் தொகை வரவு வைக்கப்படும்.

**விவசாயிகளின் எண்ணிக்கை**



## விவசாயிகளின் வங்கி கணக்கிற்கு நேரடியாக மின்னணு பரிவர்த்தனை மூலம் வழங்கப்பட்ட தொகை விவரங்கள்




அரசு தகவல் தொகுப்பு விவர மையம் இப்பணி சம்பந்தமாக பயனாளர்களின் விவரக் குறிப்புகளைத் தொகுக்கும் பணியினை 2018 -ஆம் ஆண்டு முதல் சிறப்பாக மேற்கொண்டு வருகிறது.

## III. வரையறுக்கப்பட்ட பயன்தரும் ஓய்வூதியத் திட்டம் (பழைய ஓய்வூதியத் திட்டம்)

வரையறுக்கப்பட்ட பயன்தரும் ஓய்வூதியத் திட்டம் (பழைய ஓய்வூதியத் திட்டம்) 01-04-2003-க்கு முன் பணியமர்த்தப்பட்ட அனைத்து பணியாளர்களையும் உள்ளடக்கியது. 31-05-2024 அன்றுள்ளவாறு, இந்தத் திட்டத்தின் கீழ் 2,29,525 பணியாளர்கள் உள்ளனர். 2023-2024-ஆம் ஆண்டில் 23,792 பணியாளர்கள் ஓய்வு பெற்றதால் 7,256.23 கோடி ரூபாய் ஓய்வூதியப் பலன்களுக்காகச் செலவிடப்பட்டுள்ளது. இதுதவிர 6,97,236 ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் மேற்கூறிய திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுகின்றனர். 2023-2024-ஆம் ஆண்டில், ஓய்வூதியதாரர்கள் இறப்பு காரணமாக ஏற்கனவே இருந்த 11,631 ஓய்வூதியதாரர்கள் குடும்ப ஓய்வூதியதாரர்களாக மாற்றப்பட்டு, இதற்காக 1,002.55 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது. மானியக் கோரிக்கை எண் 50-இன் கீழ், ஓய்வூதியம்


மற்றும் ஏனைய ஓய்வுகால நன்மைகளுக்கான செலவினத்தை மேற்கொள்ளும் பொருட்டு, 2024-2025-ஆம் நிதியாண்டிற்கு, 42,509.25 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**கடந்த ஆண்டுகளில் ஓய்வூதியம் மற்றும் ஓய்வுக்கால நன்மைகளுக்கான செலவு விவரம் பின்வருமாறு:-**





**ஓய்வூதிய செலவு அதிகரித்ததற்குக் காரணம், அரசு பணியாளர்களின் ஓய்வுபெறும் வயதானது 2020-ஆம் ஆண்டு 58 லிருந்து 59 ஆகவும், மற்றும் 2021-ஆம் ஆண்டு 59 லிருந்து 60 ஆகவும் உயர்த்தியதால் ஆகும்.**

31-05-2024 அன்றுள்ளவாறு மாநில அரசு ஓய்வூதியதாரர்களின் விவரங்கள் பின்வருமாறு:-



**31-05-2024 அன்றுள்ளவாறு குடும்ப ஓய்வூதியதாரர்களின் விவரங்கள் பின்வருமாறு:-**




## ஓய்வூதியம் (Pension)

(அ) ஓய்வூதியம் பெறத் தகுதி பெறுவதற்கு குறைந்தபட்ச தகுதிப் பணிக்காலம் 10 நிறைவுற்ற ஆண்டுகளாகும் (10 completed years). முழுஓய்வூதியம் பெறத் தகுதி பெறுவதற்கு குறைந்தபட்ச தகுதி பணிக்காலம் 30 நிறைவுற்ற ஆண்டுகளாகும். மேலும்,

அரசுப்பணியாளர்கள் ஓய்வு பெறும் போது, பெற்ற ஊதியத்தில் 50 சதவீதம் அல்லது இறுதி 10 மாத பணிக்காலத்தில் பெற்ற சராசரி ஊதியத்தில் 50 சதவீதம் இதில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஓய்வூதியம் கணக்கிடப்படுகிறது.


(ஆ) **01-10-2017** அன்று முதல், குறைந்தபட்ச மாத ஓய்வூதியம் **7,850** ரூபாய் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

**கூடுதல் ஓய்வூதியம் / கூடுதல் குடும்ப ஓய்வூதியம்**

**80** வயது முடிந்த ஓய்வூதியதாரர் / குடும்ப ஓய்வூதியதாரர் அதாவது **81** வயது ஆரம்பிக்கும்போது கூடுதல் ஓய்வூதியம் / கூடுதல் குடும்ப ஓய்வூதியம் பெறுவதற்கு தகுதியுடையவர்கள் ஆவர். **31-05-2024** அன்றுள்ளவாறு கூடுதல் ஓய்வூதியம் / கூடுதல் குடும்ப ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியதாரர்கள்/ குடும்ப

ஓய்வூதியதாரர்களின் மொத்த எண்ணிக்கை 93,621 ஆகும்.

**வயது வாரியாக கூடுதல் ஓய்வூதியம் /கூடுதல் குடும்ப ஓய்வூதியம் பெறுவோர் விவரங்கள்**




**அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களின் பணியாளர்களுக்கான ஓய்வூதியம்**

அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களின் பணியாளர்களுக்கு, மாநில அரசுப் பணியாளர்களுக்கு

அளிக்கப்படுவது போன்றே குறைந்தபட்ச மாத ஓய்வூதியம் 7,850 ரூபாய் உட்பட ஏனைய ஓய்வுகாலப் பலன்கள் அனுமதிக்கப்படுகின்றன.

**வரையறுக்கப்பட்ட பயன் தரும் ஓய்வூதியத் திட்டம் மற்றும் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் ஆகியவற்றின் கீழ்வரும் பணியாளர்களுக்கான ஓய்வுக்காலப் பலன்கள்**

ஓய்வு பெறும்போது பணியாளர் கணக்கிலுள்ள ஈட்டிய விடுப்பு ஒப்படைப்பு, சொந்த அலுவலுக்கான ஈட்டா விடுப்பு ஒப்படைப்பு செய்து விடுப்புச் சம்பளம் பெற அனுமதியும் மற்றும் ஓய்வு பெறும் பணியாளர், ஓய்வு பெற்ற பின்னர் தன்னுடைய சொந்த ஊருக்கு அல்லது தான் வசிக்க விரும்பும் வேறு ஏதாவது ஊருக்குச் செல்வதற்கான பயணப்படி வழங்கப்படுகிறது.

## வரையறுக்கப்பட்ட பயன்தரும் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ்வரும் பணியாளர்களுக்கான பணிக்கொடை (Gratuity)

**(அ) ஆற்றிய பணிக்கான பணிக்கொடை (Service Gratuity)**

பத்து நிறைவுற்ற ஆண்டுகளுக்கு (10 completed years) குறைவாக தகுதிப்பணி புரிந்தவர்களுக்கு, அவர்கள் ஆற்றிய பணிக்கான பணிக்கொடை அனுமதிக்கப்படுகிறது. இது அவர்கள் ஆற்றிய பணிக்காக அனுமதிக்கத்தக்க ஓய்வுகாலப் பணிக்கொடையுடன் கூடுதலாக வழங்கப்படுகின்ற மொத்தத் தொகையாகும்.

**(ஆ) இறப்புப் பணிக்கொடை (Death Gratuity)**

அரசுப் பணியாளர் ஒருவர் பணியில் இருக்கும் போதே மரணமடையும் நேர்வில், 01-10-2017 முதல், பின்வரும் வீதங்களில் இறப்புப் பணிக்கொடை அனுமதிக்கப்படுகிறது:-

| வ. எண் | பணிக்காலம் | பணிக்கொடையின் வீதம் |
|---|---|---|
| 1. | ஓராண்டுக்குக் குறைவாக | மாத ஊதியத்தில் இரு மடங்கு |
| 2. | ஓராண்டு அல்லது அதற்கு அதிகமாக, ஆனால் ஐந்தாண்டுகளுக்குக் குறைவாக | மாத ஊதியத்தில் ஆறு மடங்கு |
| 3. | ஐந்தாண்டுகள் அல்லது அதற்கு அதிகமாக, ஆனால் பதினொரு ஆண்டுகளுக்குக் குறைவாக | மாத ஊதியத்தில் பன்னிரண்டு மடங்கு |
| 4. | பதினொரு ஆண்டுகள் அல்லது அதற்கு அதிகமாக, ஆனால் இருபதாண்டுகளுக் குக் குறைவாக | மாத ஊதியத்தில் பதினைந்து மடங்கு |

| வ. எண் | பணிக்காலம் | பணிக்கொடையின் வீதம் |
|---|---|---|
| 5. | இருபதாண்டுகள் அல்லது அதற்கு அதிகமாக | அதிகபட்சமாக மாத ஊதியத்தில் 33 மடங்கு என்பதற்கு உட்பட்டு, முடிவுற்ற ஒவ்வோர் ஆறு மாதத் தகுதிப் பணிக்கும் அரைமாதச் சம்பளம். அவ்வாறு வழங்குகிற இறப்புப் பணிக்கொடை 20 இலட்சம் ரூபாய்க்கு மிகாமல் இருக்கும். |

**(இ) ஓய்வுகாலப் பணிக்கொடை (Retirement Gratuity)**

ஒரு அரசு பணியாளர், ஐந்து நிறைவுற்ற ஆண்டுகளும் (completed 5 years) அதற்கு மேலும் தகுதிப்பணியை முடித்திருந்தால், அவர் ஓய்வு பெறும் போது ஓய்வுகாலப் பணிக்கொடை வழங்கப்படுகிறது. 01-04-1998 அன்று அல்லது அதற்குப் பிறகு ஓய்வுபெறும் பணியாளர்களுக்கு அவர்கள் கடைசியாகப் பெற்ற அடிப்படைச் சம்பளம் மற்றும் அகவிலைப் படியின்

அடிப்படையில் பணிக்கொடை கணக்கிடப்படுகிறது. 01-01-2016 முதல் இறப்பு பணிக்கொடை / ஓய்வுகாலப் பணிக்கொடையின் உச்சவரம்புத் தொகை 20 இலட்சம் ரூபாய் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

**வரையறுக்கப்பட்ட பயன்தரும் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ்வரும் பணியாளர்களுக்கான குடும்ப ஓய்வூதியம் (Family Pension under Defined Benefit Pension Scheme)**

(அ) 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 ஆம் தேதி அல்லது அதற்குப் பிறகு இறந்த அரசு பணியாளர் அல்லது ஓய்வு பெற்ற அரசு பணியாளரின் குடும்பத்திற்கு அவர் ஒரு வருடத்திற்கும் குறையாத காலத்திற்கு தொடர்ச்சியான தகுதிப் பணியினை நிறைவு செய்திருந்தால் அவர்தம் குடும்பத்திற்கு குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படும்.

(ஆ) அரசாணை நிலை எண்.313, நிதி (ஊதியக்குழு)த் துறை, நாள்.25-10-2017-ன் மூலமாக குடும்ப ஓய்வூதியம் நிர்ணயம் செய்யப்படும் பொழுது ஓய்வூதியதாரர் ஓய்வு பெறும் பொழுது பெற்ற ஊதியம்

மற்றும் தர ஊதியத்தின் திருத்தப்பட்ட ஊதிய விகிதம் / ஊதிய ஏற்ற முறையில் தொடர்புடைய பரிந்துரைக்கப்பட்ட அலகில் குறைந்தபட்ச ஊதியத்தில் 30%-க்கும் குறைவாக இருக்கக்கூடாது.

(இ) 01-10-2017 முதல் வழங்கப்படும் குறைந்தபட்ச குடும்ப ஓய்வூதியம் மாதம் 7,850 ரூபாய் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

**கருணைத் தொகை (Ex-Gratia Payment)**

பங்களிப்பு வருங்கால வைப்புநிதி / மாநில அரசின் ஓய்வூதியமில்லாத பணியாளர் அமைப்பைச் சேர்ந்த இறந்த பணியாளர் குடும்பங்களுக்கும், 01-01-1986-க்கு முன்னர் பணியிலிருந்து ஓய்வு பெற்ற அல்லது பணியிலிருக்கும் போது இறந்துவிட்ட முன்னாள் மாவட்ட வாரியப் பணியாளர்களுக்கும், குடும்ப ஓய்வூதியம் பெற தகுதியில்லாத நபர்களுக்கும் மாதமொன்றுக்கு வழங்கப்படும் கருணைத் தொகை 645 ரூபாயுடன்

01-04-2023 முதல் 404 சதவீத அகவிலைப்படியும் சேர்த்து வழங்கப்படுகிறது.

**ஓய்வூதியத் தொகையில் ஒரு பகுதியை மொத்தமாக அளித்தல் (Commutation of Pension)**

ஓய்வூதியம் பெறுவோர், தமது ஓய்வூதியத் தொகையில் $33^1/_3$ விழுக்காடு வரையிலான ஓய்வூதியத் தொகையினை ஒட்டுமொத்தமாகப் பெற்றுக் கொள்ளலாம். இச்சலுகை, விருப்பத்தின் பேரில் பணியிலிருந்து ஓய்வு பெறுபவர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. எனினும், அகவிலைப்படி ஓய்வூதிய ஒப்படைப்பிற்கு முன்னர் உள்ள தகுதியான முழு ஓய்வூதிய தொகைக்கு வழங்கப்படுகிறது.

**அகவிலைப்படி**

ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் மற்றும் தற்காலிக ஓய்வூதியம் / தற்காலிக குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும், அரசுப்

பணியாளர்களுக்கு வழங்கப்படுவது போலவே அகவிலைப்படி வழங்கப்படுகிறது.

**மருத்துவப்படி**

01-10-2017 முதல் ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் மற்றும் தற்காலிக ஓய்வூதியம் / தற்காலிக குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு மாதம்தோறும் 300 ரூபாய் மருத்துவப்படி வழங்கப்படுகிறது.

**பொங்கல் பரிசு**

"C" மற்றும் "D" பிரிவு பணியாளர்களாக இருந்து ஓய்வுபெற்ற மானியம் பெறும் கல்வி நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள், முன்னாள் கிராம பணியமைப்பு (முன்னாள் கிராம அலுவலர்கள், கிராம உதவியாளர்கள்) உட்பட அனைத்து "C" மற்றும் "D" பிரிவு அரசு ஓய்வூதியதாரர்கள், அனைத்து வகை தனி ஓய்வூதியதாரர்கள் (Ad-hoc pensioners of all categories) மற்றும் அனைத்து குடும்ப ஓய்வூதியதாரர்கள் அதாவது ஓய்வூதியதாரர்கள் எந்த பணியாளர் பிரிவிலிருந்து ஓய்வு

பெற்றிருந்தாலும் / பணியாளர்கள் பணியிடை மரணம் அடைந்திருந்தாலும், ஒட்டுமொத்த பொங்கல் பரிசுத் தொகையாக 500 ரூபாய் வழங்கப்படுகிறது.

**பண்டிகை முன்பணம்**

ஓய்வூதியதாரர்களுக்கு பண்டிகை முன்பணம் 02-08-2019 முதல் 4,000 ரூபாய் வழங்கப்படுகிறது. இத்தொகையானது பத்து சமமான தவணைகளில் பிடித்தம் செய்யப்படும்.

**மின்னணு ஓய்வூதியம் (e-Pension)**

ஓய்வூதியம் வழங்கும் நடைமுறையும் மற்றும் ஓய்வூதியதாரர்கள் தொடர்பான புள்ளி விவரங்களை பெற கணினித் தகவல் மென்பொருள் அனைத்து மாவட்டங்கள் மற்றும் ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம், சென்னை ஆகிய இடங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், ஓய்வூதியதாரர்களின் ஓய்வூதியம் மற்றும் ஏனைய ஓய்வுக்காலப் பயன்களை நேரடியாக அவரவர் வங்கிக் கணக்குகளில் மின்னணு

தீர்வுமுறை (Electronic Clearing Service) / மண்டல மின்னணு தீர்வுமுறை (Regional Electronic Clearing Service) மூலமாக வரவு வைக்கப்படுகிறது. மேலும், முதன்மை மாநில கணக்காயரின் தொகுப்பிலுள்ள ஓய்வூதியம் குறித்த விவரங்கள் அனைத்தும் மின்னணு ஓய்வூதிய மையத் தொகுப்பிற்கு (e-Pension Central Server) மாற்றப்பட வழிவகை செய்வதன் மூலம் ஓய்வூதியம் குறித்த விவரங்களைத் துல்லியமாக பெறுவதோடு குறைந்த செலவு மற்றும் குறுகிய காலத்தில் அதிக பயன்பெற வழிவகுக்கும்.

**ஓய்வூதியதாரர்களின் வருடாந்திர நேர்காணல் (e-Mustering):**

மாநில அரசு ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்கள் ஒவ்வொரு ஆண்டும் ஜூலை, ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்களில் தங்களின் வாழ்நாள் சான்றிதழை (Life Certificate) சமர்ப்பித்து வந்தனர்.

ஓய்வூதியதாரர்கள் அவர்களின் வசதிக்கேற்ப பின்வரும் முறைகளில் ஏதேனும் ஒரு நேர்காணல் முறையை தேர்வு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

1. மின்னணு வாழ்நாள் சான்று (DLC), ஜீவன் பிரமான் இணைய முகப்பு வழியாக கீழ்காணும் வழிமுறைகளில் ஏதேனும் ஒன்றை ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்கள் அவரவர் விருப்பத்தின் அடிப்படையில் மேற்கொள்ளலாம்.

அ) இந்திய அஞ்சல் கட்டண வங்கி (IPPB) (ஓய்வூதிதாரர்கள் / குடும்ப ஓய்வூதிதாரர்கள் இருக்கும் இடத்திலேயே இச்சேவையை பெறுவதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது)

ஆ) இ-சேவை மையங்கள் / பொது சேவை மையங்கள்.

இ) ஜீவன் பிரமான் இணைய முகப்புடன் இணைக்கப்பட்ட பயோமெட்ரிக் சாதனம் கொண்ட ஓய்வூதியர் சங்கங்கள்.

2) தபால் மூலம் வருடாந்திர வாழ்நாள் சான்றிதழை சமர்ப்பித்தல்.

3) நேரடியாக வருடாந்திர வாழ்நாள் சான்றிதழை சமர்பித்தல் (Direct Mustering).

ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் பெறுவோர் நேர்காணலுக்கு (Annual Mustering) நேரில் வருவதைத் தவிர்க்கவும், 80 சதவீதத்திற்கு குறையாமல் வருடாந்திர நேர்காணல் ஜீவன் பிரமான் இணைய முகப்பு வழியாக, இந்திய அஞ்சல் கட்டண வங்கி (IPPB) மூலமாக இருப்பிடத்திற்கே சென்று சேவை, இ-சேவை மையங்கள் / பொது சேவை மையங்கள், ஜீவன் பிரமான் இணைய முகப்புடன் இணைக்கப்பட்ட பயோமெட்ரிக் சாதனம் கொண்டுள்ள ஓய்வூதியர் சங்கங்கள் மூலம் உறுதி செய்யப்பட வேண்டும் என்பதற்கான திருத்திய ஆணைகள் வயதான ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்கள் நேர்காணலுக்கு நேரில் வருவதையும் தவிர்த்து ஊக்குவிக்கும் பொருட்டு வெளியிடப்பட்டுள்ளது.

மேற்கூறிய ஆணையின்படி 7,00,198 மொத்த ஓய்வூதியதாரர்களில் 5,85,465 (83%) ஓய்வூதியதாரர்களுக்கு மின்னணு வாழ்வுசான்று வழியாக நேர்காணல் செய்யப்பட்டது. இதில் 84,468 (12%) ஓய்வூதியதாரர்கள் இந்திய அஞ்சல் கட்டண வங்கி (IPPB) வழியாக அவர்களின் இருப்பிடத்திலேயே இச்சேவையைப் பெற்றுள்ளனர்.

தமிழ்நாடு அரசு ஓய்வூதியர்களுக்கான வருடாந்திர நேர்காணல் ஆண்டு முழுவதும் செய்வதற்கான வழிவகையினை 01-07-2023 முதல் நடைமுறைப்படுத்தி கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிட்டுள்ளது:

1. ஒவ்வொரு ஆண்டும் குடிமை ஓய்வூதியம் பெறுவோருக்கான நேர்காணலை அவர்கள் ஓய்வு பெற்ற மாதத்தில் நடத்தப்படும்.

2. குடிமை ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் (இரட்டை ஓய்வூதியம்) பெறுவோர் இரண்டு

ஓய்வூதியங்கள் பெறும்போது, ஒவ்வொரு ஆண்டும் குடிமை ஓய்வூதியத்திற்கு (ஓய்வுபெற்ற மாதத்தில்) நேர்காணல் செய்யும்போதே குடும்ப ஓய்வூதியத்திற்கும் நேர்காணல் செய்ததாக கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.

3. குடும்ப ஓய்வூதியம் பெறுவோர், சிறப்புப் பிரிவு ஓய்வூதியம் பெறுவோர் (உலேமா ஓய்வூதியம், மாநில சுதந்திரப் போராட்ட தியாகிகள் ஓய்வூதியம் போன்ற அனைத்து சிறப்பு ஓய்வூதியங்கள் உட்பட) மற்றும் கருணைத் தொகை ஓய்வூதியம் பெறுவோர் ஆகியோர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் அவர்கள் முதலில் ஓய்வூதியம் தொடங்கப்பட்ட நாளுக்குரிய மாதத்தில் நடத்தப்படும்.

4. குடிமை ஓய்வூதியர்கள் / குடும்ப ஓய்வூதியர்கள் மற்றும் சிறப்பு ஓய்வூதியம் பெறுவோர் ஆகிய அனைத்து ஓய்வூதியர்களும் அவர்களுக்குரிய மாதத்திலோ அல்லது நீட்டிக்கப்பட்ட / சலுகை காலமாக அனுமதிக்கப்பட்ட

அடுத்த மாதத்திலோ நேர்காணல் செய்யத் தவறினால், அந்த ஆண்டின் சம்மந்தப்பட்ட ஓய்வூதியர்கள் நேர்காணலுக்கான சலுகை மாதத்தின் அடுத்த மாதத்திலிருந்து ஓய்வூதியம் நிறுத்தப்படும்.

**ஓய்வூதிய பதிவுகள் மின்னணுமயமாக்கல்** (Digitization)

சென்னை மாநில கணக்காயர் அலுவலகத்தில் உள்ள ஓய்வூதியம் தொடர்பான ஆவணங்களை மின்னணுமயமாக்கம் செய்திட முதல்கட்ட பணிகளுக்கு அரசு 95.53 இலட்சம் ரூபாய் ஒப்பளிப்பு செய்துள்ளது. இரண்டாம் கட்டப்பணிக்காக தற்போது வரை 132.16 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

**ஓய்வூதியர் இணையம்** (Pensioners Portal)

2020-ஆம் ஆண்டு முதல் ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மை முறை நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர் ஓய்வூதியதாரர்களின் அனைத்து விவரங்கள் மேம்படுத்தப்பட்ட இணையத்தில் கிடைக்கப்பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ஓய்வூதியர்கள் https://www.karuvoolam.tn.gov.in (IFHRMS) என்ற வலைதளத்தினை பார்வையிட்டும் களஞ்சியம் கைப்பேசி செயலி மூலம் அவர்கள் பெறும் ஓய்வூதிய விவரங்களை பதிவிறக்கம் செய்துகொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## IV.ஓய்வூதிய இயக்குநரகம்

ஓய்வூதிய இயக்ககம் 01-09-1994 அன்று அரசால் நிறுவப்பட்டது. இவ்வியக்ககம் தற்போது நிதித் துறை அரசு கூடுதல் செயலாளர் நிலையில் உள்ள இயக்குநரின் தலைமையின் கீழ் இயங்குகிறது. இந்த இயக்ககம், கீழ்கண்ட முக்கிய பணிகளை மேற்கொண்டு வருகிறது:-

(அ) மாநில அரசு பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களின் ஓய்வூதியர் குறைகளைத் தீர்த்தல்.

(ஆ) ஓய்வூதியதாரர்களின் குறைகளை, ஓய்வூதிய குறை தீர்க்கும் மன்றம் மூலம் தீர்த்தல்.

(இ) ஓய்வூதியதாரர்கள் கோரும் தெளிவுரைகளை வழங்கிடல்.

(ஈ) அரசுத் துறைகளின் தொழிற்சாலை பணியாளர்களின் சேமநல நிதித் திட்டம் தொடர்பான பணிகளை நிர்வகித்தல் மற்றும் நிறைவேற்றுதல்.

(உ) தமிழ்நாடு அரசு ஓய்வூதியதாரர்களின் மருத்துவ நலநிதித் திட்டம், 1995ன் கீழ் அரசு ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு நிலுவையிலுள்ள நேர்வுகளைத் தீர்வு செய்தல்.

(ஊ) தமிழ்நாடு அரசு ஓய்வூதியதாரர்களின் குடும்ப பாதுகாப்பு நிதித் திட்டம், 1997-ஐ நிர்வகித்தல் மற்றும் செயல்முறைபடுத்தல்.

(எ) தமிழ்நாடு அரசு பணியாளர்களின் சிறப்பு சேமநலநிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம், 1984 மற்றும் 2000 ஆகியவற்றின் மதிப்பீடு, கணக்கு ஒத்திசைவு மற்றும் கட்டுப்பாடு பணி.

(ஏ) அமைப்புசாரா தினக்கூலிப் பணியாளர்கள், தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கான தமிழ்நாடு அரசு சமூக பாதுகாப்புத் திட்டம், 1974-ஐ நிர்வகித்து நிறைவேற்றுதல்.

## தமிழ்நாடு அரசு ஓய்வூதியர்களின் குடும்ப பாதுகாப்பு நிதித் திட்டம்

தமிழ்நாடு அரசு ஓய்வூதியர் குடும்ப பாதுகாப்பு நிதித் திட்டம் 01-01-1997-ல் அறிமுகப்படுத்தப்பட்டு 01-01-1998-ல்


நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்த திட்டத்திற்கு ஒரு மாதத்திற்கான சந்தாத் தொகை செலுத்திய பிறகு இறக்க நேரிடும் ஓய்வூதியதாரரின் தகுதியான குடும்ப உறுப்பினர்களுக்கு அல்லது ஓய்வூதியதாரரால் நியமனம் செய்யப்பட்ட நியமனதாரருக்கு 50,000 ரூபாய் வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு அரசு ஓய்வூதியர்களின் குடும்ப பாதுகாப்பு நிதித் திட்டத்தின் ஓய்வூதியர்களின் மாத சந்தா தொகையானது 80 ரூபாயிலிருந்து 150 ரூபாயாக, 01-07-2021 முதல் உயர்த்தி அரசு ஆணையிட்டுள்ளது. சராசரியாக மாதந்தோறும் பெறப்படும் 6.50 கோடி ரூபாய் சந்தா தொகையின் அடிப்படையில் சுமார் 1300 மறைந்த ஓய்வூதியர்களின் கணவன் / மனைவி / நியமனதாரருக்கு குடும்ப பாதுகாப்பு நிதி உதவி கேட்புகள் தீர்வு செய்யப்படுகின்றன.


மே 2021 முதல் ஏப்ரல் 2024 வரை **125.00** கோடி ரூபாய் முன்பணமாக அரசு கணக்கிலிருந்து தமிழ்நாடு

அரசு ஓய்வூதியர் குடும்ப பாதுகாப்பு நிதித் திட்டத்திற்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. அரசு நல்கிய ஆதரவின் அடிப்படையில், நிலுவையிலிருந்த **25,000** கேட்புகள் நேர் செய்யப்பட்டு, தொகை உரிய பயனாளிகளின் வங்கி கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து 31-05-2024 வரை **2,75,453** கேட்புகளுக்கு, **1089.25** கோடி ரூபாய் தீர்வு செய்யப்பட்டுள்ளது.

**2021, 2022 மற்றும் 2023-ஆம் ஆண்டுக்கான குடும்ப பாதுகாப்பு நிதித் திட்டத்தின் கீழ் ஓய்வூதியதாரர்களின் பங்களிப்பு**



**2019 முதல் 2024 வரை ஆண்டு வாரியான குடும்ப பாதுகாப்பு நிதி தொடர்பான கோரிக்கைகள் மற்றும் தீர்வுகள்**




**தமிழ்நாடு அரசுப் பணியாளர்களின் சிறப்பு சேமநல நிதி மற்றும் பணிக்கொடை திட்டம் 1984**

இத்திட்டம் 01-04-1984 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாதம் 20 ரூபாய் வீதம் 148 மாதங்கள் வரை அரசு பணியாளரிடம் பிடித்தம் செய்யப்பட்டு, அவர் பணியிலிருந்து ஓய்வு பெறும் போது, அவர் செலுத்திய பங்களிப்புத் தொகை, வட்டி மற்றும் அரசின் பங்குத் தொகையாக 10,000 ரூபாய் சேர்த்து வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 01-04-2023 முதல் 31-05-2024 வரையிலான காலகட்டத்தில் 10,921 ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு பணப்பயன் வழங்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு அரசுப் பணியாளர்களின் சிறப்பு சேமநல நிதி மற்றும் பணிக்கொடை திட்டம் 2000**

இப்புதிய திட்டம் 01-10-2000 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 30-09-2000 வரை அரசுப் பணியில் உள்ள அனைத்து நிரந்தரப் பணியாளர்களின் விருப்பத்தின்பேரில் இப்புதிய திட்டத்தில் சேர்க்கப்பட்டு 50 ரூபாய் வீதம் மாதந்தோறும், ஓய்வு பெறும் மாதத்திற்கு முந்தைய மாதம் வரை செலுத்தி, அத்தொகை ஓய்வு பெறும் போது வட்டியுடன் திரும்ப வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 01-04-2023 முதல் 31-05-2024 வரை 5733 ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு தீர்வு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் 01-10-2000 அன்றும், அதற்குப் பிறகும் பணியில் சேரும் பணியாளர்கள் அனைவருக்கும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கு மாதச் சந்தா தொகை 70 ரூபாய் ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பணியிலிருந்து ஓய்வுபெறும் போது, அவர் செலுத்திய பங்களிப்புத் தொகை, வட்டி மற்றும் அரசின் பங்குத் தொகையான 10,000 ரூபாய் சேர்த்து வழங்கப்படுகிறது.

**தமிழ்நாடு அரசு தொழிற்சாலை தொழிலாளர் பங்களிப்பு வருங்கால வைப்பு நிதித் திட்டம் 1969**

இத்திட்டம் தமிழ்நாடு அரசுத் தொழில் துறை நிறுவனங்களில் பணிபுரியும் தினக்கூலிப் பணியாளர்களின் நலன் கருதி 1969-ஆம் ஆண்டு அரசாணை எண்.1883, நிதித் (பல்வகை) துறை, நாள் 26-12-1969-இன்படி தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 01-04-1989-க்கு முன்னர் ஊதியத் தொகையில் 8.33 சதவீதத் தொகை பணியாளர் பங்காகவும், அதற்கு சமமாக அரசு பங்கு தொகையாகவும் நிதி பெறப்பட்டது. 01-04-1989-க்கு பின்னர் பணியாளரின் ஊதியத் தொகையில் 10 சதவீதத் தொகை பணியாளரின்

பங்காகவும் அதற்கு சமமாக அரசு தொழில் துறை நிறுவனங்களின் பங்காகவும் பெறப்படுகிறது.

தற்போது வேளாண்மைத் துறை, வேளாண்மைத் (எண்ணை வித்துக்கள்) துறை, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம், வனத்துறை, பொதுப்பணித்துறை, கால்நடை பராமரிப்புத்துறை, பட்டு வளர்ச்சித் துறை, தோட்டக்கலைத்துறை மற்றும் போக்குவரத்துத் துறை உள்ளிட்ட 9 அரசுத் துறை நிறுவனங்கள் இத்திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளன. 12,694 உறுப்பினர்கள் இதுவரை இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர். சம்பந்தப்பட்ட அலுவலர்களால் சந்தாதாரர்களிடமிருந்து பிடித்தம் செய்யப்படும் சந்தா தொகை அரசு தன்வைப்பு கணக்கு தலைப்பின் கீழ் வரவு வைக்கப்படுகின்றது.

2023-2024 நிதியாண்டு வரை கணக்கு தாள்கள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், 01-04-2023 முதல் 31-05-2024 முடிய 386 பயனாளிகளுக்கு 3.57 கோடி ரூபாய் இறுதித் தொகை பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.

**ஓய்வூதியதாரர்களின் குறை தீர்த்தல்**

பல்வேறு மாவட்டங்களிலுள்ள ஓய்வூதியதாரர் / குடும்ப ஓய்வூதியதாரர்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள், ஓய்வூதிய இயக்கக மின்னஞ்சல் மூலம் பெறப்படும் மனுக்கள், முதலமைச்சரின் தனிப்பிரிவு மூலமாக பெறப்படும் மனுக்கள், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலமாக பெறப்படும் மனுக்கள் ஆகியவற்றின் மீது உரிய கவனம் செலுத்தப்பட்டு, உடனடியாக தீர்வு காணப்படுகிறது.

**மாவட்டங்களில் நடைபெறும் ஓய்வூதியதாரர் குறை தீர்க்கும் கூட்டம்**

அரசால் வெளியிடப்பட்ட திருத்திய வழிகாட்டுதல்களின்படி, மாவட்ட ஆட்சியாளர்கள் தங்கள் மாவட்டங்களில் ஆண்டுக்கு ஒருமுறை ஓய்வூதியர் குறை தீர்க்கும் கூட்டத்தை நடத்துகிறார்கள். ஓய்வூதிய இயக்குநர் அல்லது இணை இயக்குநர் இந்தக் கூட்டங்களில் கலந்து கொண்டு, மாவட்டங்களிலிருந்து

பெறப்படும் குறை தீர்க்கும் மனுக்கள் மீது விரைவாகத் தீர்வு காண்பதற்கு உதவி புரிகின்றனர். மாநில கணக்காயர் அலுவலகத்தில் நிலுவையில் உள்ள ஓய்வூதிய முன்மொழிவுகளுக்கான தீர்வுகளை விரைவுபடுத்த இவ்வியக்ககத்தால் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

01-04-2023 முதல் 31-05-2024 வரை ஓய்வூதியர்கள் குறை தீர்க்கும் கூட்டம் ஏறத்தாழ அனைத்து மாவட்டங்களிலும் நடைபெற்றது. அவற்றில், புதிய மருத்துவக் காப்பீட்டு திட்டத்தின் கீழ் தீர்வு செய்யப்படாத மருத்துவச் செலவுகள், அடையாள அட்டைகள் வழங்குதல், கூடுதல் ஓய்வூதியம் வழங்குதல், பகுதி ஓய்வூதியத் தொகை திரும்ப பெறுதல், கருணைத்தொகை வழங்குதல், ஓய்வூதியம் மறுசீரமைப்பு செய்தல், குடும்ப ஓய்வூதியம் துவக்குவதில் உள்ள தாமதம் போன்ற முதன்மையான கோரிக்கைகள்

ஓய்வூதியர் குறை தீர்க்கும் கூட்டத்தில் பெறப்படுகின்றன.

**ஓய்வூதிய இயக்குநரக முதன்மை திட்டங்கள் கணினிமயமாக்கல்**

ஓய்வூதிய இயக்ககத்தால் செயல்படுத்தப்பட்டு வரும் தமிழ்நாடு அரசு ஓய்வூதியதாரர் குடும்ப பாதுகாப்பு நிதித் திட்டம் 1997 மற்றும் தமிழ்நாடு அரசு தொழிற்சாலை தொழிலாளர் பங்களிப்பு வருங்கால வைப்பு நிதித் திட்டம் 1969 ஆகிய இரண்டு முதன்மை திட்டங்கள் ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மை திட்டத்தின் (IFHRMS) கீழ் தனித்தனி மென்பொருள் அலகு (Software Module) மேம்படுத்தப்பட்டு வகைப்படுத்தப்பட்டுள்ளது. திட்டத்தின் பலன் தொகை ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மை திட்டத்தின் (IFHRMS) மூலம் பயனாளர்களின் வங்கி கணக்குகளில் நேரடியாக வரவு வைக்கப்பட்டு வருகிறது.

## V. ஓய்வூதியர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் 2022

ஓய்வூதியர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் 30-06-2022-க்கு பிறகும் மேலும் நான்காண்டுகளுக்கு சில சிறப்பு அம்சங்களுடன் நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

ஓய்வூதியர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் 2022, பொதுத்துறை நிறுவனமான யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் மூலமாக 01-07-2022 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஓய்வூதியம் பெறுபவர்களும் (வாழ்க்கைத் துணை உள்பட) குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களும் கட்டணமில்லா மருத்துவ சிகிச்சை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் நான்காண்டுகளுக்கு (2022-2026) 5,00,000 ரூபாய் (ஐந்து இலட்சம் ரூபாய்) வரை மருத்துவ காப்பீட்டு உதவியினைப் பெறலாம். இதற்காக 497 ரூபாய் சந்தா தொகையாக ஓய்வூதியர்கள் / குடும்ப

ஓய்வூதியர்களிடமிருந்து அவர்களின் மாதாந்திர ஓய்வூதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்படுகிறது.

இப்புதிய திட்டத்தில், சில நோய்களையும், சில சிகிச்சைகளையும் சிறப்பினமாக கருதி அதற்கு 10,00,000 ரூபாய் (பத்து இலட்சம் ரூபாய்) வரை மருத்துவ சிகிச்சை பெற உச்சவரம்பு உயர்த்தப்பட்டுள்ளது.

உயிர் காக்கும் அவசர தன்மை கொண்ட அங்கீகரிக்கப்பட்ட சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்சைகளுக்கு இத்திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்படாத (Non-Network) மருத்துவமனைகளிலும் சிகிச்சை மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேலும், புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் அங்கீகரிக்கப்படாத மருத்துவமனைகளில் வழங்கப்படும் சிகிச்சைகள் மற்றும் அங்குள்ள மருத்துவ வசதிகளின் தரம் அறியப்படாத நிலையில், ஒரு ஓய்வூதியர் / குடும்ப ஓய்வூதியர் தெளிவான மனநிலையில் அத்தகைய

மருத்துவமனையில் சிகிச்சை மேற்கொண்டால், அதே சிகிச்சையானது அதேநிலையில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனையில் மேற்கொண்டால் ஆகும் செலவில் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தில் 75% அளவிற்கு மருத்துவ செலவினம் மீள வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

சிறுநீரக டயாலிசிஸ் மற்றும் கோவிட்-19 நோய் தொற்றிற்கான சிகிச்சையை குறிப்பிட்ட சிகிச்சைகளின் பட்டியலில் சேர்ந்து 10,00,000 ரூபாய் (பத்து இலட்சம் ரூபாய்) வரை கட்டணமில்லா சிகிச்சை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தில் ஓய்வு பெறுபவர்கள் மற்றும் கிராம உதவியாளராக ஓய்வு பெறுபவர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் இத்திட்டத்தின் கீழ் கட்டணமில்லா மருத்துவ சிகிச்சை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் 2022-ன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில் கட்டணமில்லா சிகிச்சை பெற ஓய்வூதியதாரர்களுக்கு / குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு இதுவரை 6,91,191 காப்பீட்டு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது.

புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் செயல்பாடுகளை மேற்பார்வையிடவும் சிறப்பான முறையில் நடைமுறைபடுத்தவும் தகவல் தொழில்நுட்ப மென்பொருள் மற்றும் புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்திற்கென கைபேசி செயலி (Mobile Application) ஆகியவை மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்களால் 27-02-2024 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ், 203 மருத்துவ சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்சை முறைகள் சேர்க்கப்பட்டுள்ளன. இதில் 116 அறுவை சிகிச்சைகள் மற்றும் 87 மருத்துவ சிகிச்சைகளும் அடங்கும். தற்போது

தமிழ்நாடு, புதுச்சேரி, பெங்களூரு, திருவனந்தபுரம் மற்றும் புதுடெல்லி ஆகிய இடங்களில் உள்ள 1294 மருத்துவமனைகள் மற்றும் புற்றுநோய்க்கு சிகிச்சை அளிக்கக்கூடிய அரசின் 16 கதிரியக்க சிகிச்சை மையங்கள் மூலம் இத்திட்டத்தின் கீழ் மருத்துவ உதவியினை வழங்குவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேலும், ஓய்வூதியர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் 2022ன் கீழ் (01-07-2022 முதல் 31-03-2024 வரை) **1,48,104** பயனாளிகள் **653.29** கோடி ரூபாய் அளவிற்கு கட்டணமில்லா மருத்துவ சிகிச்சையினைப் பெற்றுள்ளனர்.

2022 – 2024 நிதி ஆண்டுகளில் 6.05 கோடி ரூபாய் தமிழ்நாடு மருத்துவ கவனிப்பு விதியின் கீழுள்ள வழிகாட்டுதலில் தெரிவிக்கப்பட்டுள்ள – சூழ்நிலை – III மற்றும் சூழ்நிலை – IV கீழ் வரும் பயனாளிகளுக்கு அரசால் வழங்கப்பட்டுள்ளது.

இது தவிர தற்போது கோவிட்-19க்கான சிகிச்சைகளை அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ மனைகளில் மேற்கொள்ள 2.50 கோடி ரூபாய் நிதிய மூலதனம் (Corpus Fund) உருவாக்கப்பட்டுள்ளது. இதற்காக இதுநாள் வரை 85.00 கோடி ரூபாய் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

கூடுதலாக, புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் பட்டியலிடப்படாத மருத்துவமனைகளில் தீவிரமற்ற கோவிட்–19 சிகிச்சைக்கு நிதிய மூலதனம் (Corpus Fund) ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக இதுநாள் வரை ரூ 17.47 கோடி ரூபாய் அரசால் வழங்கப்பட்டுள்ளது.

**தங்கம் தென்னரசு**
நிதி மற்றும் மனிதவள
மேலாண்மைத்துறை அமைச்சர்

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை–600 001.